# 2. நிலச் சீர்திருத்தம், நில உச்சவரம்பு செயல்படுத்துதல்

நில வளத்தையும், தரத்தையும், மதிப்பீட்டையும் மிகத் துல்லியமாகவும், நெருக்கமாகவும் அறிந்திருக்கும் வாய்ப்புகள் கிராம ஊராட்சிகளுக்கே அதிகமாக உள்ளது. எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு இப்பொருள் குறித்து அதிகாரம் மற்றும் பொறுப்புகளை வழங்கினால் நிலவளத்தை மேம்படுத்த உதவுவதற்கு வழிவகுக்கும். எனவே, அரசாணை (நிலை) எண்.1006, வருவாய் (நி.வ.II) துறை, நாள் 27.10.97 மூலம் (அ) பகிர்வு உபரிநிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில உச்சவரம்புகளை செயலாக்குவதில் உதவுதல் மற்றும் நில ஆவணங்களை இப்போதைய நிலைக்கு கொண்டு வருதல் போன்ற பொறுப்புகளை கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) பகிர்வு உபரி நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில உச்சவரம்புகளை செயலாக்கும் திட்டத்தை மேற்பார்வையிடுதல் மற்றும் நில ஆவணங்களை இப்போதைய நிலைக்கு கொணர்தல், திட்டத்தை மேற்பார்வையிடுதல் மற்றும் பிற நில சீர்திருத்தச் சட்டங்களைச் செயலாக்குதல் திட்டத்தை மேற்பார்வையிடுதல் போன்ற பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியத்திற்கும், (இ) பகிர்வு உபரி நிலத்தை மேம்படுத்துதல் மற்றும் நில வரம்புகளை செயலாக்கம், நில ஆவணங்களை தற்போதைய நிலைக்கு கொணர்தல் மற்றும் பிற நில சீர்திருத்தச் சட்டங்களை மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளை மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொருள் குறித்து ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை வழங்க ஆராய்ந்து குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறது.

### கிராம ஊராட்சிகள்

1. பஞ்சமி நிலங்கள் கைமாறியிருந்தால் கண்டறிந்து அவற்றினை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அளிக்க வழி வகை செய்தல்.

2. உபரி நிலங்களை எடுத்து நிலமில்லாத விவசாயிகளுக்கு அளிப்பபதற்கு நில சீர்திருத்தச் சட்டத்தின்னபடி அரசிற்கே அதிகாரம் உள்ளதென்பதால், அவற்றினை கண்டறிந்து அரசிற்கு தெரிவிக்க ஊராட்சி மன்றம் உதவுதல்.

3. குத்தகை நிலையினைக் கண்டறிவதில் உதவுதல், குத்தகை உரிமையை ஒழுங்குபடுத்துதல் போன்றவற்றில் வருவாய் அமைப்புக்கு உதவுதல்.

4. உள்ளூர் குடிமக்களின் தொடர் ஈடுபாட்டினை அடைய முயலுதல் - வருவாயை தொகுப்பதில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல் - ஒவ்வொரு பட்டாதாரருடைய நில உடமைகளை தொகுப்பதில் உதவுதல் - தொகுக்கப்பட்ட பின்னர் ஒதுக்கப்பட்ட இடம், உடைமையின் அனுபவம், உறுதி செய்தல் ஆகியவற்றில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல்.

5. புறம்போக்கு நிலங்கள் தனியாரிடம் இருக்கும் பட்சத்தில் அது பொது பயனீட்டிற்கு பயன்படாத நிலமாக இருந்தால், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அதனை பிரித்து கொடுக்க ஊராட்சிகள் பரிந்துரை செய்யலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. குத்தகை சட்டம், பங்கு, பயிரிடும் முறை, செயலாக்கம் ஆகிய பணிகளில் வருவாய் அதிகாரிகளுக்கு உதவுதல்.

2. துண்டு நிலங்களை ஒருங்கிணைப்பதில் வருவாய் மற்றும் நில நிர்வாக அதிகாரிகளுக்கு உதவுதல். தொடர் முறையில் சட்ட அமைப்புடன் ஒருங்கிணைத்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து நிலச் சீரமைப்புச் சட்டங்கள் பற்றி வருடாந்திர ஆய்வு செய்து வருடாந்திர தகுதிநிலை அறிக்கை தயார் செய்து (Status Report) அச்சட்டங்களின் செயல்பாட்டுக் குறைபாடுகளையும் நிர்வாக சிக்கல்களையும் ஆராய்ந்து, மேற்படி குறைபாடுகளைக களையத் தக்கப் பரிந்துரைகளுடன் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

2. மாவட்ட வருவாய் அலுவலகத்தின் துணையுடன் மாவட்ட ஊராட்சிகள், ஆய்வுகளையும் மேற்கொள்ளுதல்.